JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | 39-2020 |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | P.W.6 | Prosecution /Defence / Court | |
| Name | P.K.Palanisamy | Caste | |
| Father's Name | Krishnan | Calling | |
| Village | Perundurai | Religion | |
| Taluk | Perundurai | Age | |

**Accused present**.
Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of 21.03.2024

**முதல் விசாரணை**

1) நான் தற்போது தமிழ்நாடு காவல் துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று பெருந்துறையில் வசித்து வருகிறேன்.. கடந்த 11.01.2019 ம் தேதி இரவு 11.00 மணிக்கு திங்களூர் காவல் நிலையத்தில் நான் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது கோபி வட்டம், வெள்ளங்கோவில் கிராமம், காமராஜ் நகரை சேர்ந்த அம்மாசை மகன் பூபதி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று திங்களூர் காவல் நிலைய குற்ற எண்.13/2010 இ.த.ச. பிரிவுகள் 279, 337 ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். **நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வாதியின் புகாரையும், முதல் தகவல் அறிக்கையின் அசலையும் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன்.

2) வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு 12.01.2019 ம் தேதி காலை 07.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை வாதி

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை(FAC).

பூபதி அடையாளம் காட்ட சாட்சிகள் வடிவேல் மற்றும் வீராச்சாமி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பிறகு சம்பவ இடத்தில் வைத்து சாட்சிகள் பூபதி, நந்தினி, சிவகாமி, சுகண்யா, ராமன், வடிவேல் மற்றும் வீராச்சாமி ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

**3)** விபத்தில் காயம்பட்டு ஈரோடு அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த அம்மாசை என்பவர் கடந்த 12.01.2019 ம் தேதி அதிகாலை 01.00 மணிக்கு இறந்துவிட்டதாக கிடைத்த தகவலின் பேரில் வழக்கின் சட்டப் பிரிவுகளை 279, 337 இ.த.ச. விலிருந்து 279, 304(அ) ஆக பிரிவு மாற்றம் செய்து சட்டப் பிரிவு மாறுதல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **சட்டப் பிரிவு மாறுதல் அறிக்கை அ.த.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

**4)** கடந்த 12.01.2019 ம் தேதி ஈரோடு அரசு மருத்துவமனையில் வைத்து இறந்தபோன அம்மாசை என்பவரின் பிரேதத்தின் மீது சாட்சி பூபதி அடையாளம் காண்பிக்க பஞ்சாயத்தார்கள் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் பகல் 9.45 முதல் 11.45 மணி வரை பிரேத விசாரணை செய்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **பிரேத விசாரணை அறிக்கை அ.த.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பிறகு அம்மாசை என்பவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனைக்காக தலைமை காவலர் 2287 கதிரவன் என்பவர் மூலம் மருத்துவருக்கு வேண்டுகோள் கடிதம் அனுப்பி வைத்தேன்.

**5)** விசாரணைக்காக நிலையம் ஆஜரான எதிரி தனபால் என்பவரை கடந்த 24.01.2019 ம் தேதி மாலை 04.00 மணிக்கு கைது செய்து தக்க தனி நபர் ஜாமீனில் விடுவித்தேன். விபத்தின் போது எதிரி ஓட்டி வந்த வாகனம்

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை(FAC).

பஜாஜ் டிஸ்கவர் **TN** 56 **F** 0852 என்ற எண்ணுள்ள வாகனத்தை விபத்தின் காரணம் அறியும் பொருட்டு வேண்டுதல் கடிதம் மூலம் மோட்டார் வாகன ஆய்வாளர் பெருந்துறை அவர்களுக்கு தணிக்கைக்காக அனுப்பி வைத்தேன்.

5) இத்துடன் எனது முதல் கட்ட புலன் விசாரணையை முடித்து மேல் விசாரணைக்காக திங்களூர் வட்ட காவல் ஆய்வாளர் திரு.சாந்தமூர்த்தி அவர்கள் வசம் வழக்கு கோப்பினை ஒப்படைத்தேன். நான் வழக்கு பதிவு செய்தது சம்மந்தமாகவும், முதல் கட்ட விசாரணை சம்மந்தமாகவும் காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) முதல் தகவல் அறிக்கையில் உள்ள புகார்தாரரின் கையொப்பமும், புகாரில் உள்ள புகார்தாரரின் கையொப்பமும் வேறுபட்டுள்ளது என்றால் சரியல்ல. புகாரில் அது தயார் செய்த தேதி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். புகாரை எழுதியது யார் என்றால் அது பற்றி தெரியாது. எழுத்துமூலமான புகார் என்னிடம் கொடுக்கப்பட்டது.

2) சட்டப் பிரிவு மாறுதல் அறிக்கை எத்தனை மணிக்கு தயார் செய்யப்பட்டது என்றால் இரவு 01.30 மணிக்கு தயார் செய்யப்பட்டது. சட்டப் பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தவுடன் காவல் ஆய்வாளர் வசம் வழக்கு கோப்பை ஒப்படைத்தேனா என்றால் ஒப்படைத்துவிட்டேன். எத்தனை மணிக்கு, எந்த தேதியில் ஒப்படைத்தேன் என்றால் சட்டப் பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தவுடன் வழக்கு கோப்பை காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்துவிட்டேன். நேரம் குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றால் குறிப்பிட்டு சொல்ல இயலாது. வழக்கு கோப்பை காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்த பிறகு மேற்கொண்டு நான் புலன் விசாரணை செய்ய முடியாது என்றால் சரியல்ல. காவல் ஆய்வாளர் உத்தரவின்படி எதிரியை கைது செய்தேன். காவல் ஆய்வாளர் உத்தரவு குறித்து வழக்கு கோப்பில் இல்லை என்றால் சரிதான்.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை(FAC).

3) புகார்தாரர் மற்றும் இதர சாட்சிகள் ஈரோடு அரசு மருத்துவமனையில் விசாரித்ததாக சொல்லியிருந்தால் தவறு என்றால் சாட்சிகளை சம்பவ இடத்தில் விசாரித்தேன். பிரேத விசாரணை சாட்சிகளை மருத்துவமனையில் விசாரித்தேன். சாட்சிகள் அனைவரும் நெருங்கிய உறவினர்கள் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் இருந்த நபர்கள் யாரையும் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் குடியிருப்புகள் இல்லாததால் விசாரிக்கவில்லை. சம்பவ இடத்தில் மின்விளக்குகள், மின்கம்பங்கள் இருந்ததாக மாதிரி வரைபடத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

4) சம்பவம் நடந்த இடத்தில் 10 அடி அகல மண் ரோடு தார்ரோட்டை ஒட்டி உள்ளதாக குறித்துள்ளேன் என்றால் சரிதான். அந்த சமயத்தில் சாலை பணிகள் நடக்கவில்லை என்றால் சரிதான். வழக்கை புலன் விசாரணை செய்ய ஆரம்பிப்பதற்கு முன்னால் காவல் ஆய்வாளர் என்னை விசாரித்துவிட்டு மற்ற சாட்சிகளை விசாரித்தாரா என்றால் கடைசியாகத்தான் என்னை விசாரித்தார். காவல் ஆய்வாளர் நான் விசாரித்த சாட்சிகளிடம் மறு வாக்குமூலம் பதிவு செய்தாரா என்றால் இல்லை.

5) நான் சொன்ன நேரத்தில், சொன்ன நேரத்தில் புகார் பெறப்படவில்லை என்றும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றும், பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றும். சாட்சிகளின் வாக்குமூலம் பதிவு செய்யப்படவில்லை என்றும், எதிரியை கைது செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் பொய் புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

(ஒப்பம்)
நீதித்துறை நடுவர்,
பெருந்துறை(FAC).